පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290

රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290
அரசாங்க தகவல் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களையும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.

Parliamentary Series No: 290

Department of Government Information

Submission of Observations of Hon Minister and steps taken with regard to the reports tabled by the Committee On Public Accounts in terms of Standing Order No.119(4)

119(4) ஆம் இலக்க நிலையியல் கட்டளைக்கமைய அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களும் முன்னெடுப்புக்களும் பற்றிய அறிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகளை சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : அரசாங்க தகவல் திணைக்களம்

2021 ஆண்டுக்கான நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டில் அடையாளங் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	தறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்/சமகால நிலைமைகள்
01. வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	டிசம்பர் 15 இற்கு முன்னர் அடுத்துவரும் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2024 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு வெகுசன ஊடக அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப்பட்டுள்ளது)
02. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்கல.	ஓவ்வொரு பிரிவுகளிலிருந்தும் பதில்களைப் பெறுவதில் ஒருசில தாமதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், தற்போது இடைக்கால பதில்களையாவது ஒருமாத காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
03. நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை.	திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இன்மையால் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை எதுவுமே தயாரிக்கப்படவில்லை. தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதுடன், சரியான வகையில் இயங்கி வருகின்றது.
04. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 02 கூட்டங்களையாவது நடாத்தியிருக்கவில்லை.	திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இன்மையால், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இயங்கவில்லை. தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதுடன், சரியான வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
05. 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ.756 (6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்தொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.	2021.12.31 திகதிக்கு பொருள் கணிப்பாய்வு அறிக்கை 2023.06.12 ஆம் திகதியன்று கணக்காய்வாயளர் தலைமை அதிபதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

06.	வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	2023 ஆண்டுக்குரிய பொருள் கணிப்பாய்வு நடவடிக்கைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொண்டு நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
07.	அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை	அனைத்து வாகனங்களுக்கான உரிமை திணைக்களத்தின் பெயரில் மாற்றிப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரித்துப் பதிவின் மூலப்பிரதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
08.	ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	ஒதுக்க வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2023 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
09.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்படவில்லை.	2023.08.25 ஆம் திகதியன்று அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது.
10.	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் விற்றொழிக்கப்படாமை.	2022 ஆண்டு தொடக்கம் குறித்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
11.	ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. 103,104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2022 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
12.	2016.12.29ஆம் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்ளுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படாமை.	2022 தொடக்கம் நிறுவனத்தின் வாகனங்களில் எரிபொருள் தகனம் சோதனை செய்யப்பட்டுள்ளது.
13.	வங்கி இணக்கக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல் செய்யப்படவேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின் படி செயலாற்றி குறித்த மீதிகள் ஒருமாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது அனைத்துக் குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட்டு மாதாந்த வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

14. நி.ஒ. 94 (1) இன்படி செலவு விடயதானமொன்றுக்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தது.	ஒருசில செலவு விடயதானங்களில் மாத்திரம் எஞ்சியுள்ள ஒதுக்கீடுகளை விஞ்சிய பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன், குறித்த செலவு விடயதானங்களில் அச்செலவுகள் திணைக்களத்தின் பணிகளுக்கமைய கட்டாயம் மேற்கொள்ள நேரிட்டுள்ளது. குறித்த பொறுப்புக்களில், டிசம்பர் மாதச் செலவுகளை ஈடு செய்வதற்காக அடுத்த ஆண்டுக்கான ஒதுக்கீடு பயன்படுத்தப்படுவதால் ஒதுக்கீட்டை மாற்றாமல் அடுத்த ஆண்டில் குறித்த செலவுகள் ஈடுசெய்யப்பட்டுள்ளன. ஒருசில செலவு விடயங்களில் மாத்திரம் ஒதுக்கீட்டை விஞ்சிய பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருப்பினும், இவ்வாண்டுக்கான திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த ஒதுக்கீட்டை விஞ்சிய பொறுப்புக்கள் ஏற்கப்பட்டுள்ளன.
15. ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	01. <u>திரு. ஓ.சீ.எல் டி சில்வா</u> இறுதி அறிவித்தலாக ஹொரண பிரதேச செயலாளர் மூலமாக குறித்த உத்தியோகத்தருக்கு கடன் தொகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இக்கடன் தொகை தொடர்பாக முன் கோவையை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 02. <u>திரு. எம்.ஆரியரத்ன</u> கடனை நீக்கி விடுவதற்கான குறித்த சிபார்சுகளைப் பெற்றுக் கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அதற்குரிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 03. <u>திரு. டப்ளிவ்.ஏ.எம். பிரசங்க</u> கடன் தொகை அறவிடப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் எஞ்சிய தொகையை செலுத்துமாறு அலுவலருக்கு தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
16. காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	காலாவதியான வைப்புக்களாக இருப்பது, புதிய ஊடக நிலையக் கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்திற்குரிய தக்கவைப்பு தொகையாகும். நட்ட அறவீட்டுச் செயற்பாடுகளின் பின்னர் தக்கவைப்புத் தொகை 2023.05.09 அன்று அரச வருவாயில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

17. நி.ஒ 371 இன் பிரகாரம், வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை.	திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளின் இயல்புகளுக்கமைய குறித்த நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது விவரண திரைப்படங்களை தயாரித்தல் போன்ற சில பணிகள் ஓரளவு காலம் எடுப்பதுடன், குறித்த பணிகள் நிறைவு செய்யும் வரை பெற்றுக்கொண்ட கட்டு நிதியை ஈடுசெய்வதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பணிகளுக்குரிய செலவுகள் உடனேயே ஈடுசெய்யப்படுவதுடன், விவரணத் திரைப்படத் தயாரிப்பு பணிகளில் படத்தொகுப்புப் போன்ற பணிகளைப் பூர்த்தி செய்து இறுதித் தயாரிப்பை வெளியிடுவதற்கு மேலதிக காலம் எடுப்பதால் செலவுறுதிச் சிட்டைகளைத் திரட்டி முற்பணத்தை ஈடுசெய்யும் வவுச்சர்களை சமர்ப்பிப்பதற்கு ஓரளவு தாமதம் ஏற்படுகின்றது. மேலும், தொடர்ச்சியாக முற்பண ஆவணங்களைப் பரிசீலித்து ஈடுசெய்யப்படாத முற்பணத்தை ஈடுசெய்யுமாறு குறித்த அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டு இவ்வாறான நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
18. அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்தொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள்.	அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்தொகுதியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்படாததுடன், மிகையாகக் காண்பிக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத 2022 இல் நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய ஊடக நிலையத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆவர்.
19. பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் அனைவருக்கும் எழுத்து மூலமாக பணிகள் அளிக்கப்பட்டிருக்கப்படவில்லை.	2023 ஆம் ஆண்டாகும் போது திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் கடமைப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.
20. நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை.	பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் இனங் காணப்பட்டுள்ளன.
21. அடையாளம் காணப்பட்டுள்ள நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதற்கான இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.	பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
22. அடையாளம் காணப்பட்டுள்ள நிலைபெறுதகு அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் தயாரிக்கப்படவில்லை.	தயாரிக்கப்பட்டுள்ளன.
23. பிரசைகள்/சேவைபெறுநர் பட்டயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.	பிரஜைகள்/சேவை பெறுநர் பட்டயம் 2023 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

24.	நிறுவனத்தின் பிரசைகள் /சேவைபெறுநர் பட்டயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தின் முறைப்பாடுகள் மற்றும் முன்மொழிவுகளுக்கான கருத்துப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.
25.	2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொதுநிருவாக ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2023, 2024 ஆம் ஆண்டுக்கான மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
26.	தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில், 50% க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை.	2023 ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பணிபுரியும் விடயதானத்திற்குரிய ஒவ்வொரு அலுவலர்களின் சேவைப் பிரமாணத்தைக் கருத்தில் கொண்டு, வழங்கக்கூ டிய உயர்ந்தபட்ச பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
27.	ஒட்டுதமாத்த பணியாட்தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	தயாரிக்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.
28.	மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் இயலளவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	2022 ஆண்டுக்கான சிரேட்ட அலுவலர் ஒருவர் பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளார்.
29.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது.	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் 40% வீதமான பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
30.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	நிறுவனத்தின் கணக்கு தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லத பாதகமான மட்டத்தில் இல்லாததுடன், 2021 ஆம் ஆண்டில் அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது.

31. 2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பந்தி 12.1 இன் பிரகாரம், அதன் முன்னேற்றத்தை அளவிடக்கூடிய 03 செயல்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்படவில்லை.	அடையாளங் காணப்பட்டுள்ளது.
32. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.	முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட பல விடயங்கள் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், வேறு நிறுவனங்களை இணைப்புச் செய்து கொண்டு மேற்கொள்ள வேண்டிய பரிந்துரைகள் சில தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.
33. நிதி பிரமாணக் குறிப்பின் 156(1) பிரிவின்படி அதிகாரிகளால் அரசுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு அதிகாரிகள் மீது கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இழப்புக்கள் மற்றும் நட்டம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், விசாரணைகள் முடிவுற்ற பின்னர் அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.